# 05-09-2023 செய்தி

## தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் நிலை

**தகவல் அறியும் உரிமை சட்டம்**

- தகவலை பெற முடியும்
- 2010 அரசுப் பல்கலைக்கழகங்களில் போலியாக பட்டங்கள் வழங்கப்பட்டதை அம்பலப்படுத்தியது.
- 2012 அரசாங்க ஒப்பந்தங்களில் ஊழல் நடைபெற்றதை அம்பலப்படுத்துகிறது.

**தற்போதைய திருத்தங்கள்**


- டிஜிட்டல் தனிநபர் தரவு பாதுகாப்பு சட்டம் 2023
- தகுதியான தடையானது மொத்த தடையாக மாற்றப்பட்டது.
- பொது தகவல் அலுவலர் – தகவல் வழங்குவதை மறுத்தல்
- தகவல் பெறும் உரிமையானது தகவல் வழங்குவது மறுக்கும் உரிமையாக மாற்றப்பட்டது.
- தகவல் அறியும் உரிமைக்கான தேசிய அளவில் பிரச்சாரம்,
- சமூக தணிக்கை செய்ய இயலாது.
- பொது அதிகாரிகள் பொறுப்பில் இருந்து தப்பிக்க முடியும்.
- தகவல் உரிமை (திருத்த) சட்டம், 2019, மத்திய அரசாங்க – தகவல் ஆணையர்களின் சேவை நிபந்தனைகளை தீர்மானிப்பதில் ஒருதலைபட்ச அதிகாரம்.

**செயல்படுத்துவதில் உள்ள சவால்கள்**

- விண்ணப்பம் செய்வதற்கு காரணம் தேவையில்லை
- அதிகளவிலான நிலுவை வழக்குகள்.

  போதுமான அளவிற்கு தகவல் ஆணையர்கள் இல்லை.

  தகவல் அறியும் உரிமை சட்டமானது குறிப்பிட்ட கால வரையறுக்கப்படவில்லை.
- வாதிடும் உரிமை தொடர்பான வகையகம் இல்லை




- பொது நலனுக்கு பதிலாக தனிநபர் நலனுக்காக மட்டும் பதிவு செய்யப்படுகிறது.
- குறைவான விழிப்புணர்வு
- குறைவான அதிகாரம்
- தகவல் ஆணையர்கள் வழிகாட்டுதல்களை செயல்படுத்த அதிகாரம் இல்லை.

**தீர்வுகள்**

- இணையதளம் வழியாக தகவலை வழங்குதல்
- தவறான வழக்குகளிலிருந்து பாதுகாத்தல்
- தகவல் அறியும் உரிமையை தவறாக பயன்படுத்துவதை தடுத்தல்.
- தனியுரிமையை சமநிலைப் படுத்தல்.
- பொது மக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்துதல்.

## ஒரே நாடு ஒரே தேர்தல்

- நாடு முழுவதும் ஒரே நேரத்தில் வாக்குச் சாவடிகளை ஏற்படுத்துதல்
- ஒரே நேரத்தில் மக்களவைக்கும் அனைத்து மாநில சட்ட பேரவைக்கும் தேர்தலை நடத்துதல்.
- இந்த முறையானது 1967 வரை நடைமுறையில் இருந்தது.
- ஒரே நேரத்தில் 1952, 1957, 1962 மற்றும் 1967 தேர்தல் நடைபெற்றது.
- 1968 மற்றும் 1969 ல் சில சட்டப்பேரவைகளில் பதவிகாலம் நிறைவடையும் முன்பே கலைந்ததால் ஒரே நாடு, ஒரே தேர்தல் சுழற்சியானது தடைபட்டுள்ளது.
- 1982ல் தேர்தல் ஆணையமானது ஒரே நேரத்தில் தேர்தல் நடத்துவது தொடர்பாக திருத்தங்களை மேற்கொள்ள ஆலோசனையை முன் வைத்தது.
- 1999 மே – நீதிபதி பிவி ஜீவன் ரெட்டி தலைமையில் சட்ட ஆணையம்.
- 170வது அறிக்கை. ஒவ்வொரு ஆண்டும் தேர்தல் சுழற்சிக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும்.
- 2015 ஒரே நேரத்தில் மக்களவை மற்றும் மாநில சட்டப் பேரவைகளில் தேர்தல் நடத்துவது தொடர்பான அறிக்கை

  தேர்தல் ஆணையம் சட்டத்திற்கு கட்டுப்பாட்டு, மாநிலங்களில் தேர்தலை நடத்த வேண்டும்.
- ஏன் இந்தியாவிற்கு ஒரே நாடு ஒரே தேர்தல் அவசியம்?

  பணம் சேமிக்கப்படுவதன் மூலம் பொருளாதாரம் மேம்படுத்தலாம்.
- நாட்டின் மேம்பாட்டு வேலைகளை வேகமாக நடத்த முடியும். தவறான வாக்குறுதிகள் தவிர்க்கப்படும்.
- அரசாங்கம் செயல்படுதலில் சமூக மேம்பாடு கவனம் பெறும்.

**ஒரே நாடு ஒரே தேர்தலில் உள்ள சவால்கள்**

- மக்களவை தேர்தலும் அனைத்து மாநிலங்களின் தேர்தல் காலத்தை இணைப்பதில் உள்ள சிரமம்.
- எந்த கட்சிக்கும் பெரும்பான்மை கிடைக்காத பட்சத்தில் இடைத் தேர்தல் அல்லது குடியரசுத் தலைவர் ஆட்சி போன்ற சூழ்நிலைகளை கையாள்வதில் தெளிவு இல்லை.
- பிராந்திய பிரச்சினைகள் தேசிய பிரச்சினைகளால் மறைக்கப்படலாம்.
- பிராந்திய கட்சிகளுக்கு பின்னடைவு.
- அனைத்து அரசியல் கட்சிகளுக்கும் இடையே உடன்பாடு ஏற்படுவது குறிப்பிடதக்க தடையாக உள்ளது.